






வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதல்வரும் இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். மாவட்டச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார், மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ப.கார்த்திகேயன், அமுலு, மேயர் சுஜாதா, ஆனந்த குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, அணிகளின் நிர்வாகிகள் உடனுள்ளனர்.

### அமைச்சர் துரைமுருகன் வாழ்த்துரை! அமைச்சர் சா.மு.நாசர் முன்னிலை!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வரவேற்புரை!

# செங்குன்றம் மிசா இரா.ஏழுமலை இல்லத் திருமண விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைக்கிறார்!

சென்னை, நவ. 6-

செங்குன்றம் மிசா இரா. ஏழுமலை இல்லத் திருமண விழா 7.11.2025- வெள்ளி காலை 9 மணியளவில், அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வரவேற்புரையில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு அமைச்சர் சா.மு.நாசர் முன்னிலை வகிக்கிறார்.

இம்மணவிழாவினை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்கள் திலீபன் பாபு - கௌதமி பிரபா ஆகி



யோரை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

இம்மணவிழாவில் அமைச்சர் துரைமுருகன், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., திருச்சி சிவா எம்.பி., கழக செய்தி தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., அன்பகம் கலை, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ., நே.சிற்றரசு, பூச்சி முருகன், துறைமுகம் காஜா, இரா.கிரிராஜன் எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி., டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி., சசிகாந்த் செந்தில் எம்.பி. ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., கே.சந்திரமோகன், எம்.எல்.ஏ.க்கள் டி.ஜெ.கோவிந்தராஜன், ஐ. பரந்தாமன், கே.பி.சங்கர், திருத்தணி சந்திரன், காரம்பாக்கம் கணபதி, வி.ஜி.இராஜேந்திரன், ஜோசப் சாமுவேல், ச.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, முன்னாள் எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், ஜெ.எம்.ஆருண் துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ., அசன் மௌலானா எம்.எல்.ஏ., ரூபி மனோகரன் எம்.எல்.ஏ., எம்.எஸ். கே.ரமேஷ், இ.ஏ.பி.சிவாஜி, பி.எஸ்.அமல்ராஜ், டி.செல்வம், எம்.வேல்முருகன், ஆர். டி.மதன்குமார், நா.சேகர், வி.அருணாசலம், மி.பா.அன்புதுரை உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர். மணவிழாவிற்கு வருகை தருவோரை அரிமா இரா.ஏ.பாபு, அரிமா கலைவாணி பாபு ஆகியோர் வரவேற்கின்றனர்.





கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்கள், மாமல்லபுரத்தில் நடைபெற்ற "என் வாக்குச்சாவடி ! வெற்றி வாக்குச்சாவடி !! என்ற பயிற்சிக் கூட்டத்தில் அறிவித்துள்ள தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காகவும், தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள S.I.R. வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தத்தை கழகத்தினர் அனைவரும் இணைந்து சிறப்பான முறையில் எதிர்கொள்வதற்காகவும் கழகத்தினருக்கு விளக்கிட நடைபெற்ற திருப்போரூர் வடக்கு, தெற்கு ஒன்றியம் மற்றும் பேரூர் கழக பாக முகவர்கள் செயல்வீரர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு உரையாற்றினார். உடன் திருப்போரூர் வடக்கு ஒன்றியச் செயலாளரும், ஒன்றிய குழு தலைவருமான எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புச்செழியன், தொகுதி தேர்தல் பார்வையாளர் எஸ்.எம்.கே.அண்ணாதுரை, தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனூர் எம்.சேகர், பேரூர் செயலாளர் மு.தேவராஜ், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### மக்களின் வரிப் பணத்தில் இயங்கும் தேர்தல் ஆணையம்

# ‘மக்களாட்சி புதைக்கப்படவில்லை’ என்ற நம்பிக்கையை துளிர்க்க வைக்குமா?

### ராகுல்காந்தி எம்.பி, வெளியிட்ட ஆதாரங்களை சுட்டிக்காட்டி – முதல்வர் வலைதளப் பதிவு!

சென்னை, நவ.6-

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (05-11-2025) வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

திருடப்படும் மக்கள் தீர்ப்பு; வாய்திறக்காத தேர்தல் ஆணையம்!

**அண்மைக்காலமாக பா.ஜ.க. பெற்று வரும் தேர்தல் வெற்றிகளின் உண்மைத்தன்மை குறித்து மீண்டுமொரு முறை பெரும் ஐயம் எழுகிறது. ஹரியானாவில் நடைபெற்றுள்ள வாக்குத் திருட்டு குறித்து எனது சகோதரரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல்காந்தி அவர்கள் வெளியிட்டுள்ள ‘பச்சையான ஆதாரங்கள்’ அதிர்ச்சியூட்டுகின்றன.**

**வெறுப்பினை மூட்டி, பொய் வாக்குறுதிகளைக் கூறி 2014-இல் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க.வின் பிளவுவாத அரசியலை மக்கள் இனியும் நம்பத் தயாராக இல்லை என்ற நிலை எப்போதோ ஏற்பட்டுவிட்டது. ஆகையால் தேர்தலில் முறைகேடுகள் என்பதையெல்லாம் தாண்டி, வாக்காளர் பட்டியலிலேயே அப்பட்டமான அட்டூழியத்தை அரங்கேற்றி, மக்களின் ஜனநாயகத் தீர்ப்பைக் களவாண்டு, இன்று அம்பலப்பட்டு நிற்கிறது.**

**இதன் அடுத்தகட்டம்தான் SIR என்ற பெயரில் மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சதி என்பதற்கு பீகாரும், இன்று வெளியாகியுள்ள #HaryanaFiles-உமே சான்று!**

**இவை அனைத்துக்கும் பொறுப்பான தேர்தல் ஆணையம் இத்தனை குற்றச்சாட்டுகள், அடுக்கடுக்கான ஆதாரங்களோடு முன்வைக்கப்பட்டும் எந்த ஒரு முறையான விளக்கமும் அளிக்காமல் இருப்பது வேதனையளிக்கிறது. மக்களின் வரிப் பணத்தில் இயங்கும் தேர்தல் ஆணையம் மக்கள் மன்றத்தில் உரிய பதில் சொல்லி, இந்தியாவில் மக்களாட்சி முழுவதும் குழிதோண்டிப் புதைக்கப் படவில்லை என நம்பிக்கையைத் துளிர்க்க வைக்குமா?**

இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



தமிழ்நாடு அரசின் தொன்மையான தேவாலயங்கள் புனரமைப்பு திட்டத்தின் கீழ் பூவிருந்தவல்லியில் உள்ள C.S.I வெஸ்லி தேவாலயத்திற்கு ரூபாய் 85 லட்சம் ஒதுக்கீடு செய்த நிலையில், தேவாலய புனரமைப்பு பணி தொடக்க விழா மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் புனரமைப்பு பணிகள் தொடங்கி வைத்து பல்வேறு மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் நிதி உதவிகள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப் , ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., பேராயர் பால் பிரான்சிஸ் ரவிச்சந்திரன், மாநில சிறுபான்மை இணை செயலாளர் சி.ஜெரால்டு, நகரக் கழக செயலாளர் ஜி.ஆர்.திருமலை, நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் துணைத் தலைவர் ஸ்ரீதர் மற்றும் திருச்சபை நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்